# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **குடியுரிமை**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - I முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

www.Padasalai.Net

www.Padasalai.Net

# குடியுரிமை

## குடியுரிமை (சரத்து 5-11)

**குடியுரிமையின் பொருள்:**

- குடியுரிமை என்ற சொல்லுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் எங்கும் வரையறை தரப்படவில்லை.
- குடியுரிமை என்பது ஒரு நாட்டில் குடியிருக்கும் மக்களுக்கு கிடைக்கக் கூடிய உரிமைகளாகும்.
- ஒருவன் ஓர் அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்ட -வனாகவும் மற்றும் அந்த அரசாங்கத்தில் இருந்து பாதுகாப்பைப் பெற உரிமை உடையவனாகவும் இருப்பானேயானால் அவன் குடிமகன் எனப்படுகிறான்.
- ஒரு நாட்டின் குடிமகன் முழுமையான குடிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் பெறுகிறான்.
- ஒரு நாட்டின் குடிமகனாக இருக்கும்போது மட்டும்தான் அந்த நாட்டின் அரசியலமைப்பால் வழங்கப்படும் உரிமைகள் கிடைக்கும்.
- அவ்வுரிமைகள் குடிமகன் அல்லாத பிறநாட்டவர்களுக்குக் கிடைக்காது.
- அரசியலமைப்பின் இரண்டாம் பிரிவு அரசியல் அமைப்பு தொடங்கப்பட்ட நாளில் இந்தியாவில் வசித்த பல்வேறு மக்களைப் பற்றி கூறுகிறது.
- இந்தியக் குடியுரிமைச் சட்டம் **1955, பாராளுமன்றத்தால் சட்டமாக** இயற்றப்பட்டது. இது 1986 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது.

**இந்தியக் குடிமகனுக்கு மட்டுமே பொருந்தும் உரிமைகள் :**

1. மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் இவற்றின் எதன் காரணமாகவும் பாகுபடுத்தி வேறுபாடு காட்டுவதற்கு எதிரான உரிமை (சரத்து 15).
2. அரசின் பொதுப் பணிகளில் அனைவருக்கும் சமமான வாய்ப்பு உரிமை (சரத்து 16).
3. பேச்சு மற்றும் கருத்துக்களை வெளியிடுதல், அமைதியாக கூடுதல், சங்கங்கள் அமைத்தல், இந்தியா முழுவதும் சென்றுவரல், இந்தியாவின் எப்பகுதியிலும் தங்கி வாழல் மற்றும் தொழில் வணிகம் இவற்றைச் செய்வதற்கான சுதந்திரம் (சரத்து 19).
4. கல்வி மற்றும் பண்பாட்டு உரிமைகள் (சரத்து 29, 30)
5. மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு வாக்களிக்கும் உரிமை பாராளுமன்ற மற்றும்


Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

சட்டமன்றங்களுக்கு போட்டியிடும் உரிமை குடியரசுத் தலைவர், துணைக் -குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி பதவி, மாநில ஆளுநர் மைய அரசின் முதன்மை வழக்குரைஞர், மாநில அரசின் முதன்மை வழக்குரைஞர், மாநில அரசின் முதன்மை வழக்குரைஞர் ஆகிய பதவிகளுக்கு இந்தியக் குடிமகனே வர வேண்டும்.

- இத்தகைய உரிமைகளை மட்டுமின்றி, இந்தியக் குடிமகனுக்குச் சில கடமைகளும் உள்ளன.
- வரி செலுத்துதல், இந்திய தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்தை மதித்தல், நாட்டைக் காத்தல் முதலியன அவற்றுள் சில.
- இந்தியாவில் பிறந்த குடிமகன் மட்டுமின்றி, இந்தியாவை ஏற்றுக் கொண்டு குடிமகனாகிய வெளிநாட்ட -வரும் குடியரசுத் தலைவராக இயலும்.

**குடியுரிமையை அடையும் முறைகள் :**

- அரசியலமைப்புச் சட்டத்தின் **சரத்து** 11
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 5 முதல் 10 வரையிலான விதிகள் குடியுரிமை குறித்துக் கூறுகின்றன.
- **சரத்து** 11 குடியுரிமை குறித்த சட்டங்களை இயற்ற பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை அளிக்கிறது.
- இந்த அதிகாரத்தின்படி இந்தியப் பாராளுமன்றம் 1955-இல் இந்தியக் குடியுரிமைச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் **1986 முதல் 1992** ஆண்டுகளில் திருத்தம் செய்யப் -பட்டது.
- எனவே, இந்தியாவில் அரசியல -மைப்புச் சட்டம் தொடங்கும்போது குடியுரிமை குறித்த சட்டவகை முறைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டமும், அரசியலமைப்பு தொடங்கிய பின்னர் குடியுரிமை குறித்த சட்டவகை முறைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டமும், அரசியல -மைப்பு தொடங்கிய பின்னர் குடியுரிமை குறித்த வகைமுறைகளை 1955ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டமும் விளக்குகின்றன.

**இந்திய அரசியலமைப்பு தொடங்கும்போது குடியுரிமை :**

ஜனவரி 26, 1950ல் எவரெல்லாம் இந்தியக் குடிமக்கள் என்பதனை இந்திய அரசியலமைப்பு விளக்குகிறது.

**1. உறைவிடம் மூலம் குடியுரிமையைப் பெறுதல் : (சரத்து 5)**

இதன்படி இந்தியாவை உறைவிடமாகக் கொண்ட எவரும் பின்வரும் நிலைப்பாடில் ஏதேனும் ஒன்றைக் கொண்டிருந்தாலும், அவர் இந்தியக் குடிமகனாவார்.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

1. அவர் இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும்.
2. அவருடைய பெற்றோரில் எவரேனும் ஒருவர் (தாய் அல்லது தந்தை) இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும்.
3. இந்திய அரசியலமைப்பு தொடங்கும் முன்னர் அவர் இந்தியாவில் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் குடியிருந்தவராக இருக்க வேண்டும்.

**2. குடி பெயர்தல் மூலம் குடியுரிமை பெறுதல் :**

**i) பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்கள்: (சரத்து 6)**

- இதன்படி பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து இந்தியாவில் நிரந்தரமாக தங்க வந்தவர்களும் கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் இந்தியக் குடிமக்களாகவே கருதப்படுவார்கள்.

a) அவர்களாகவோ அல்லது அவர்கள் பெற்றோர்களோ அல்லது அவர்களின் பெற்றோரின் பெற்றோர்களில் ஒருவரோ 1935ம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறுக்கப் -பட்டபடி இந்தியாவில் பிறந்தவர் -களாக இருக்கவேண்டும். மற்றும்,

b) அவர்கள் 19.07.1948 ஆம் தேதிக்கு முன்னர் அவ்வாறு குடிபெயர்ந்து வந்தவர்களாக இருப்பின், அவர்கள் அவ்வாறு குடிபெயர்ந்து வந்த தேதி முதல் இந்தியாவில் வழக்கமாக குடியிருந்து வந்தவராக இருக்க வேண்டும். அல்லது

c) அவர்கள் 19.07.1948 ஆம் தேதிக்கு பின்னர் குடிபெயர்ந்து வந்தவர்களாக இருப்பின், அவர்கள் இந்திய குடிமக்கள் ஆவதற்குரிய பதிவை அதற்கென இந்திய அரசு நியமிக்கப்பட்ட அலுவலரிடம் பதிவு செய்திருக்க வேண்டும்.

d) மேலும், அப்பதிவை செய்து கொள்வதற்கு உடன் முந்திய குறைந்த பட்ச காலமான ஆறுமாத காலமானது அவர்கள் இந்தியாவிலேயே குடியிருந்து வந்தவர்களாக இருக்க வேண்டும்.

- இவ்விதி 6 ஆனது சரத்து 5க்கு உட்பட்டதாகும், அதாவது 5வது விதியின்படி குடியுரிமை பெற்றவர்கள் 6வது விதியின்படி நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

**ii) இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து சென்றவர்கள்: (சரத்து 7)**

- இவ்விதியின்படி 01.03.1947 ஆம் தேதிக்குப் பின் இந்தியாவில் இருந்து பாகிஸ்தானிற்கு குடிபெயர்ந்து சென்றவர்கள் இந்தியக் குடி -மக்களாகக் கருதப்பட மாட்டார்கள்.
- எனினும் அவ்வாறு பாகிஸ்தான் சென்றவர்கள் மறு குடியமர்வுக்கு

அல்லது நிலையாகத் திரும்பி விடுவதற்காக வழங்கப்பட்ட ஓர் அனுமதிச் சீட்டின் கீழ் இந்தியாவிற்கு திரும்பி வந்துவிட்டால் அவர்கள் 19.07.1948 ஆம் தேதிக்குப் பிறகு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்களாகவும், இந்திய குடிமக்களாகவும் கருதப்படுவர்.

- ஆனால், அவர்கள் மேற்படி சரத்து 6(b)(ii)-ன் கீழ் குடிமக்கள் ஆவதற்குரிய பதிவினைச் செய்து கொண்டிருக்கவேண்டும்.

**iii) பதிவு செய்து கொள்ளல் மூலம் குடியுரிமை பெறுதல்: (சரத்து 8)**

- இவ்விதி, இந்தியாவில் பிறந்து வெளிநாட்டில் வாழ்பவர்கள், இந்தியக் குடியுரிமையைப் பெறல் குறித்து கூறுகிறது.
- இதன்படி ஒருவர்தாமோ அல்லது தம் பெற்றோரில் ஒருவரோ அல்லது தம் பெற்றோரின் பெற்றோரில் ஒருவரோ 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறுக்கப் -பட்டபடி இந்தியாவில் பிறந்திருந்து அவர் இந்திய எல்லைக்கு அப்பால் உள்ள வெளிநாடு எதிலும் வழக்கமாக குடியிருந்து வருபவராக இருந்தால் இந்திய குடிமகனாகவே கருதப்படுவார்.
- ஆனால், அவர் பின்வரும் நிபந்தனைகளை நிறைவு செய்தல் வேண்டும். அதாவது அவர் அப்போதைக்கு குடியிருந்து வரும் நாட்டில் உள்ள இந்திய தூதுவர் அல்லது வணிக முகவரிடம் உரிய நடைமுறையின்படி விண்ணப்பம் செய்து, தம்மை ஒரு இந்தியக் குடிமகனாக பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- இங்கு அரசியலமைப்பிற்கு முன்னர், பின்னர் என்ற கேள்விக்கு இடமில்லை. இவ்விதி 8, 5வது விதியில் எவை கூறப்பட்டிருப்பினும் பொருட்படுத்தாமல் இயங்க வல்லது.

**இந்தியக் குடியுரிமையை இழத்தல் : (சரத்து 9)**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு (ஜனவரி 26, 1950) ஓர் இந்தியக் குடிமகன் தன்னிச்சையாக ஒரு வெளிநாட்டு குடியுரிமையைப் பெற்றால், அவன் இந்தியக் குடியுரிமையை இழந்தவனாகிறான்.

**குடியுரிமையைத் தொடர்தல் : (சரத்து 10)**

- சரத்து 5 முதல் சரத்து 8 வரையிலான விதிகளின் கீழ் இந்திய குடிமக்களாகும் ஒவ்வொருவரும்



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

தொடர்ந்து இந்தியக் குடிமக்களாகவே இருப்பர் என சரத்து 10 கூறுகின்றது.

- ஆனால், அவர்களது குடியுரிமையை பாராளுமன்றம் சட்டம் ஒன்றை இயற்றுவதன் வாயிலாக இழக்கச் செய்யலாம்.

**குடியுரிமையை ஒழுங்குபடுத்த பாராளுமன்றத்திற்கான சட்டமியற்றும் அதிகாரம் : (சரத்து 11)**

- பாராளுமன்றம் சட்டமொன்றை இயற்றி குடியுரிமையை ஒழுங்குபடுத் -தலாம் என சரத்து 11 அதிகாரமளிக் -கிறது. இதன்படி 1955 ஆம் ஆண்டில் இந்தியக் குடியுரிமைச் சட்டத்தை பாராளுமன்றம் இயற்றியது.
- இச்சட்டம் இந்திய அரசியலமைப்பு இழத்தல் குறித்து கூறுகிறது. இச்சட்டம் **1986 மற்றும் 1992, 2002, 2005**ஆம் ஆண்டுகளில் திருத்தம் செய்யப்பட்டது.

**இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பின் குடியுரிமை :**

**குடியுரிமை அடைதல்:**

1. பிறப்பால் குடியுரிமை பெறல்
2. மரபுவழித் தோன்றலினால் பெறல்
3. பதிவு மூலம் பெறல்
4. வெளிநாட்டவர் தம்மை குடிமகனாக்கக் கோரல் மூலம் பெறல்
5. எல்லையை கூட்டிணைத்துக் கொள்வதன் மூலம் பெறல் ஆகிய முறைகளின் கீழ் பெறலாம்.

**1. பிறப்பின் மூலம் :**

- இந்திய நாட்டில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். மேலும் பெற்றோர்கள் இருவரும் இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும். அதாவது ஜஸ்சோலி மண்ணின் சட்டம்.
- **26.01.1950** ஆம் தேதியிலோ அல்லது அதற்கும் பின்னரோ ஆனால் 30.06.1987க்கு முன்னரோ பிறந்திருந்தால் (குடியுரிமை திருத்தச் சட்டம் 1986க்கு முன்பு) அல்லது
- **01.07.1987** ஆம் தேதியிலோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்து ஆனால் பெற்றோரில் எவரேனும் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில், அவர் பிறப்பால் இந்தியக் குடிமகனாவார்.

**2. பரம்பரையின் மூலம் (By Desent) :**

- இந்தியாவிற்கு வெளியில் பிறந்தவர்கள். ஆனால், தாயோ தந்தையோ இந்திய குடிமக்களாக இருக்க வேண்டும். அதவாது ஜஸ் சான்குயின் (Jus Sanguine) (ரத்தத்தின் சட்டம்).
- ஒரு நபர் இந்தியாவிற்கு அப்பால் 26.01.1950 ஆம் தேதியிலோ, அதற்கு பின்னரோ பிறந்து அவரின் பெற்றோரில்

எவரேனும் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருந்தால். அவர் மரபு வழித் தோன்றலின் காரணமாக இந்திய குடியுரிமையைப் பெறுகிறார்.

- 1992 ஆம் ஆண்டின் குடியுரிமை சட்ட திருத்தத்திற்கு முன்னர், தந்தை இந்தியக் குடிமகனாக இருந்தால் மட்டுமே குடியுரிமை அளிக்கப்பட்டது.

### 3. பதிவின் மூலம் (By Registration):

- ஒரு நபர் இந்திய அரசியலமைப்பின் படியோ அல்லது இந்தியக் குடியுரிமை சட்டத்தின் படியோ ஏற்கனவே குடிமகனாகாமல் இருந்தால், பின்வரும் வகையினரில் ஒன்றாக இருந்தால், அவர் தம்மை ஓர் இந்தியக் குடிமனாக பதிவு செய்து கொள்ளும் படி அதற்கென உள்ள அதிகாரியிடம் விண்ணப்பிக்கலாம்.
- அதனை ஏற்று அவ்வதிகாரி குடிமகனாகப் பதிவு செய்து கொள்வர்.
- 1986 ஆம் ஆண்டில் பதிவு செய்வதற்கு முன் 6 மாதங்கள் இந்தியாவில் வசித்திருக்க வேண்டும் என்பது 5 ஆண்டுகள் என மாற்றியமைக்கப்பட்டது.

1. இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்களும், குடியுரிமை பெறுவதற்காக விண்ணப்பிப்பதற்கு முன் இந்தியாவில் ஐந்து வருடம் வசித்தவர்களும்.
2. இந்தியாவைப் பூர்வீகமாக் கொண்டு இந்தியாவிற்கு வெளியிலும் அல்லது பிற நாடுகளிலும் வசிப்பவர்கள்.
3. இந்திய குடிமகன்களை திருமணம் செய்த பெண்கள். கடந்த 5 ஆண்டுகள் இந்தியாவில் குடியிருக்க வேண்டும்.18 வயது நிரம்பாத இந்தியக் குடிமக்கள்.
4. 18 வயது நிரம்பிய முழத் தகுதியுள்ள ஆனால் முதல் அட்டவணையில் (அதாவது பொதுநல கூட்டமைப்பு - Common Wealth Countries) குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளின் குடிமக்களாக இருப்பவர்கள்.

### 4. குடிமக்களாக ஏற்றுக் கொள்வதன் மூலம் (By naturalization):

- இம்முறையின் மூலம் குடியுரிமை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் விண்ணப்பம் அளிக்க வேண்டும். விண்ணப்பித்தவர்களை இந்திய குடிமக்களாக ஏற்றுக் கொள்வதற்கு பின்வரும் தகுதிகள் இருக்க வேண்டும்.

1. அவர் தேவையான வயது நிரம்பிய முழுத் தகுதியுள்ளவராக இருக்க வேண்டும்.
2. அவர் எந்தெந்த நாடுகளின் இந்திய குடிமக்கள் இதே முறையின் மூலம் அந்நாட்டு குடிமக்களான ஏற்றுக் கொள்ள மறுக்கப்படுகின்றார்களோ.

அந்நாடுகளின் குடிமகன்களாக இருக்கக் கூடாது.

3. அவர் மற்ற நாட்டின் குடியுரிமை விட்டுவிட வேண்டும்.
4. இம்முறைக்கு விண்ணப்பிப்பதற்கு முன் 12 மாதங்கள் இந்தியாவின் வசித்தவராகவோ அல்லது அரசுப் பணிகளில் இருந்தவராகவோ இருக்க வேண்டும். அல்லது 12 மாதங்களுக்கு முன் உள்ள 7 வருடங்களில் 4 வருடங்கள் இந்தியாவில் வசித்தவராகவோ அல்லது அரசுப் பணிகளில் இருந்தவராகவோ இருக்க வேண்டும்.
5. அவர் விசுவாசத்திற்கான உறுதி -மொழி எடுக்க வேண்டும்.
6. அவர் நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.
7. அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மொழியில் போதுமான அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**5. பிரதேசங்களின் ஒன்றிணைப்பின் மூலம் (By Incorporation of Territories)**

❖ ஏதெனும் உத்தரவு அல்லது தீர்ப்பின் மூலம் ஒரு புதிய யூனியன் பிரதேசம் இந்தியாவின் அங்கமாக சேர்க்கப் -பட்டால் இந்திய அரசு அந்த யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த மக்களை இந்திய குடிமக்களாக அறிவிக்கலாம்.

❖ இந்தியாவில் ஒற்றைக் குடியுரிமை உள்ளது. அதாவது இந்தியக் குடியுரிமை.

❖ குடியுரிமை என்றால் முழுமையான குடியுரிமை என்று **சரத்து 9** கூறுகின்றது. பிரிக்கப்பட்ட விசுவாசத்தை இந்திய அரசியலமைப்பு அங்கீகரிக்கவில்லை.

❖ ஒரு குடிமகன் என்பவர் நாட்டில் சட்டத்தின் மூலம் வழங்கப்படும் எல்லா உரிமைகளையும் அனுபவிப்பவர் ஆவார்.

❖ பாராளுமன்றம், குடியுரிமை உரிமையை சட்டத்தின் மூலம் முறைப்படுத்தும் என்று **சரத்து 11** கூறுகிறது.

**குடியுரிமையை இழக்கும் மூன்று முறைகள் (Three modes of losing Citizenship)**

**1. துறத்தல் (Renunciation)**

**குடியுரிமையை தானாக முன் வந்து துறப்பது.**

❖ வயது, உரிமை மற்றும் தகுதியைப் பெற்று இந்திய குடிமகனாகவும், அதே சமயத்தில் மற்றொரு நாட்டில் குடிமகனாகவும் உள்ள ஒருவர் தாம் இந்தியக் குடியுரிமையைத் துறப்பதாக உரிய அதிகாரியிடம் விண்ணப்பித் -தால், அவரது இந்தியக் குடியுரிமை முடிவுக்கு வரும்.

- மேலும் அவருடைய உரிமை வயதடையாத குழந்தைகளும் இந்தியக் குடியுரிமையை இழப்பர்.
- ஆனால், 18 வயதடைந்த குழந்தைகள் இந்தியக் குடியுரிமையைத் தொடரலாம்.

**2. முடிவுக்கு வருதல் (Termination) சட்டத்தால் குடியுரிமை முடிவுக்கு வருதல்.**

- இந்தியக் குடிமகன் எவரேனும் ஒருவர்இயல்பாக்க முறையிலோ, பதிவு செய்து கொள்வதன் மூலமோ அல்லது பிறவகையிலோ தன்னிச்சையாக வேறொரு நாட்டின் குடியுரிமையை அடைந்து கொண்டால் அவர் இந்தியக் குடிமகன் எனும் உரிமையை இழக்கிறார்

**3. குடியுரிமை பறிப்பு : (நீக்குதல்) (Deprivation)**

- தவறான வழிகளை பின்பற்றி பதிவு முறையின் மூலமாகவோ அல்லது குடிமக்களாக ஏற்றுக் கொள்ளும் முறையின் மூலமாக பெற்ற குடியுரிமையை கட்டாயமாக முடிவுக்குக் கொண்டுவருதல்.
- இதன் படி வெளிநாட்டவரை இயல்பாக்க முறையிலோ, அல்லது பதிவு செய்து கொள்ளல் மூலமோ அல்லது உறைவிடம் அல்லது குடியிருத்தல் மூலமோ இந்தியக் குடிமகனாக ஏற்றுக் கொண்ட பின் அவரின் குடியுரிமை பறிக்கப்படலாம். அவையாவன.

1. இயல்பாக்கம் அல்லது பதிவு செய்தல் முறையில் பெறப்பட்ட குடியுரிமை, மோசடியாகவோ, திரித்துக் கூறலினாலோ அல்லது முக்கியப் பொருண்மைகளை மறைத்தாலோ பெறப்பட்டதாக இருப்பின்,
2. அவர் தன்னுடைய சொல், செயல் இவற்றின் மூலம் இந்திய அரசியலமைப்பிற்கு கட்டுப்படாமல் அல்லது பற்றில்லாமல் இருப்பதாகக் காட்டிக் கொண்டால்,
3. போரின் போது இந்தியாவின் எதிரி நாட்டோடு சட்ட விரோதமாக வியாபாரம் செய்தாலோ அல்லது தகவல் தொடர்பு கொண்டாலோ,
4. இயல்பாக்கம் அல்லது பதிவு முறையில் குடியுரிமை பெற்ற 5 ஆண்டுகளுக் -குள் 2 ஆண்டுகளுக்கும் குறையாத சிறைத் தண்டணை விதிக்கப் -பட்டிருந்தாலோ,

- குடிமகன் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு இந்தியாவிற்கு அப்பால் வழக்கமாக குடியிருந்து வருபவராக இருப்பாரானால் அவரின் குடியுரிமை கட்டாயமாக பறிக்கப்படலாம்.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com